**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள், இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை | | | |
| (i) XXVI ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரதி 2022 பெப்ரவரி மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | XXVII ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகள் | அரச இலட்சணை, பல்கலைக்கழகத்தின் பெயர் மற்றும் முகவரி என்பன சகல மோட்டார் வாகனங்களிலும் பொறிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 17 வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>------------------------------- | | | |
| | IX ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பந்தி | அரச சேவையின் அறிவைப் பயன்படுத்தி அலுவலக நேரத்திலேயே அலுவலகம் அல்லாத வேலைகளுக்காக பெறப்படுகின்ற கட்டணத்தில் 10 சதவீதம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மாகந்துர வளாகத்தில் வெளிவாரி பாடநெறிகளுக்குரிய படிகளில் அரசின் பங்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முகாமைத்துவம் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய PED/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் 06 விரிவுரையாளர்களுக்கு மேற் படிப்பிற்காக வெளிநாடு செல்லும் உடன்படிக்கை பிணைமுறியை மீறியமையினால் அறவிடவேண்டிய ரூபா 2,172,842 தொகையை 2008 ஆம் ஆண்டு முதல் | திறைசேரியின் அங்கீகாரம் பெற்று முதலீடு செய்யப்படும். | உடன்படிக்கை பிணைமுறியை மீறியமையினால் அறவிடவேண்டிய பணத்தை அறவிடுவதற்கும், நடைமுறைக் |

| | | |
|---|---|---|
| அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது அறவிடப்பட்ட ரூபா 17,520,686 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படாமல் நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | | கணக்கில் பணத்தை நிறுத்தி வைக்காமல் முறையான பிரகாரம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 53,983,044 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 68,492,160 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 14,509,116 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டில் அரசாங்க மானியம் ரூபா 82,500,000 இனால் அதிகரித்தமை மற்றும் மூலதன செலவினங்கள் ரூபா 12,384,548 இனால் குறைவடைந்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டி வளாகத்தில் நனோவிஞ்ஞான தொழில்நுட்பவியல் திணைக்களத்தை வரிவுபடுத்தும் வேலைக்காக மும்மொழிகளிலும் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதற்காக ரூபா 206,847 செலவிடப்பட்டிருந்தது. எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை கிடைத்ததன் பின்னர் நனோவிஞ்ஞான தொழில்நுட்பவியல் திணைக்கள தலைவரால் இந்த வேலை தேவையற்றது என தீர்மானம் எடுத்தமையின் காரணமாக பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தல் செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது. | பெறுகைக் குழுவிற்கு இது சமர்ப்பிக்கப்பட்டு அந்தக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையினை சரியான பிரகாரம் இனங்கண்டு பெறுகை நடவடிக்கை மேற்கொள்ள வேண்யிருந்ததுடன் ஏற்பட்ட நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடல் வேண்டும். |
| (ஆ) சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் போது ஒவ்வொரு சொத்துத் தொகுதிக்கும் உரிய சகல சொத்துக்களும் ஒரே தடவையில் மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தால் | மீண்டும் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் சரியாக மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு சரியான சொத்துத் தொகுதி மற்றும் சகல சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தால் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் தவிர ஏனைய சொத்துத் தொகுதிகளின் தற்போதைய பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வாகனங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் முறையே ரூபா 59,797,000 இற்கும், ரூபா 250,679,200 இற்கும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அந்த மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாதிருந்ததுடன் கிரயம் ரூபா 778,570,309 ஆன நடைமுறையல்லாச் சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016/2017, 2017/2018 மற்றும் 2018/2019 கல்வி ஆண்டுகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டுச்செல்லும் சதவீதம் முறையே 12, 05 மற்றும் 3.59 சதவீதமாக இருந்தது. வியாபார விஞ்ஞான பீடம் மற்றும் கால்நடை வள, மீன்பிடி மற்றும் போசணை பீடத்திற்காக சேர்க்கப்பட்ட மாணவர்களின் விட்டுச்செல்லும் சதவீதம் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை அதற்குக் காரணமாகும். | நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி மதியுரையாளர்களின் மூலம் பல்கலைக்கழகத்தை விட்டுச்செல்லல் குறைக்கப்பட்டுள்ளது. | மேலும் காரணங்களை பரீட்சித்து மாணவர்கள் விட்டுச்செல்வதை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பல்கலைக்கழகத்தால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கல்விப் பிரின் திட்டம் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கல்விசாரா பிரிவின் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒவ்வொரு பணிக்காகவும் பாதீட்டு நிதிஏற்பாடு உள்ளடக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற வேண்டியிருந்த 13 பணிகள் ஆரப்பிக்கப்பட்டிருக்கவும் இல்லை. | 2022 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் அதன் பிரகாரம் தயாரிக்கப்படடுள்ளதுடன் திட்டமிடப்பட்ட 13 பணிகளும் கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டம் சகல பிரிவுகளுக்கும் உரியதாக தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| Improving Relevant & Quality of Under Graduate Education செயற்திட்டத்திற்காக உலக வங்கியில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு கிடைத்த ரூபா 2,003,150 பயன்படுத்தப்படாமல் 2014 ஆம் ஆண்டு முதல் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். | நிதியத்தை மிகவும் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கையளிக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 514,303,211 ஆன 15 நிர்மாண வேலைகள் உரிய ஒப்பந்தகாரர்களால் குறித்துரைத்த காலத்தின் போது பூர்த்திசெய்து கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் பல்கலைக்கழகத்தால் அது தொட்பாக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | காலநிலை நிலைமை மற்றும் மின்சார தடையினால் உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் நாள் நீடிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்த காலத்தில் வேலைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்து எதிர்கால விலை முரண்களினால் ஏற்படக்கூடிய நட்டத்தை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஒப்பந்தப் பெறுமதி ரூபா 176,000,000 ஆன விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தில் கட்டம் | குறைபாடுகளை சரிசெய்துகொள்வதற்கு ஏற்படுகின்ற செலவினங்களை இறுதி | ஒப்பந்த உடன்படிக்கை காலத்தின் போது உரிய |

| | | |
|---|---|---|
| III இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் 2019 மார்ச் 01 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் பின்னர் கண்டறியப்பட்ட குறைபாடுகளை சரிசெய்யுமாறு 2019 திசெம்பர் 02 ஆந் திகதி அந்த பீடத்தின் தலைவர் மற்றும் பல்கலைக்கழகத்தின் பொறியியலாளரால் ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அவை சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | பட்டியலில் கழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறைபாடுகளை சரிசெய்துகொள்வதற்கோ அல்லது அந்த குறைபாடுகள் சரிசெய்யப்பட்டதன் பின்னர் அதற்காக செலவாகின்ற உள்ளபடியான செலவினங்களை இறுதி பட்டியலில் கழிப்பதற்கோ நவடிக்கை எடுத்தல் வேண்டும். |